

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவது மற்றும் சுருக்க முறை திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைக்கூட்டம் இன்று (26.08.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 575/2016 நாள்: 26.08.2016

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி,**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவது மற்றும் சுருக்க முறை திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைக்கூட்டம் இன்று (26.08.2016) நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 01.09.2016 அன்று வெளியிடப்பட உள்ளது. மேலும், 01.01.2017-ஐ தகுதியேற்படும் நாளாகக் கொண்டு கீழ்க்கண்ட கால அட்டவணைப்படி சுருக்கமுறை திருத்தம் செய்யப்படவுள்ளது.

**காலஅட்டவணை:**

| பணி | நாள் |
|---|---|
| வரைவுவாக்காளர்பட்டியல் வெளியிடுதல் | 01.09.2016 (வியாழக்கிழமை) |
| வாக்காளர் பட்டியல் தொடர்பான புகார் / கோரிக்கை மனுக்கள் பெறுதல் | 01.09.2016 வியாழன் முதல் 30.09.2016 வெள்ளிவரை |
| வாக்காளர் பட்டியல் கிராமசபைக் கூட்டங்களில் வெளியிட்டுசரிபார்த்தல் | 10.09.2016 சனிக்கிழமைமற்றும் 24.09.2016 சனிக்கிழமை |
| சிறப்புமுகாம் நாட்கள் | 11.09.2016 (ஞாயிறு) மற்றும் 25.09.2016 (ஞாயிறு) |
| இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 05.01.2017 (வியாழக்கிழமை) |

இந்தியதேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் 01.01.2017 அன்று 18 வயதுபூர்த்தியடைந்தவர்கள் மற்றும் வாக்காளர்பட்டியலில் தங்களதுபெயர் இடம் பெறாதவர்கள் தங்களது பெயரை வாக்காளர்பட்டியலில் சேர்க்கபடிவம்-6ஐ பூர்த்தி செய்துவழங்கவும். வாக்காளர் பட்டியலில் தவறாகஉள்ளவாக்காளர் பெயர், உறவுமுறை, புகைப்படம் போன்றவிபரங்களைதிருத்தம் செய்யபடிவம் 8ஐயும், முகவரி மாற்றம் செய்யபடிவம் 8ஏ யையும், இறந்துபோனவாக்காளர்களின் பெயரினைநீக்கம் செய்ய படிவம் 7 உடன் இறப்பு சான்றையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் படிவம்-6ஏ யை பூர்த்தி செய்து வழங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர் பட்டியலை செம்மைப்படுத்தும் பணி தொடர்பான சிறப்பு முகாம்கள் 10.09.2016 (சனிக்கிழமை) மற்றும் 24.09.2016 (சனிக்கிழமை) ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளது. இவ்விரு தினங்களில் அந்தந்த வரையறுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்களும் ஒருங்கிணைந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தவறுகள்,

விடுதல்கள் போன்றவற்றை கண்டறிய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. மேலும் சிறப்புமுகாம் அல்லாத நாட்களில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு படிவங்களை அளிக்கலாம். எனவே வாக்காளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி விபரங்களை தாமாகவே முன் வந்து தெரிவிக்கும்படியும் வாக்காளர் பட்டியலில் தவறாக உள்ள விபரங்களை திருத்தி செம்மைப்படுத்த 100 சதவீதம் தவறுகள் இல்லாத வாக்காளர் பட்டியல் தயாரிக்கவும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கன்னியாகுமரி மாவட்டஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. பொ. இராஜேந்திரன், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு, ஆர். ராஜ்குமார், வட்டாட்சியர்கள் திருமதி. முத்துலெட்சுமி (தோவாளை), திருமதி. புவனேஸ்வரி (கல்குளம்), திரு. சுப்பிரமணியன் (தேர்தல்), திரு. மீனாட்சிசுந்தர் (சிபிஐஎம்), பாரதீய ஜனதா கட்சியின் சார்பாக திரு. கிருஷ்ணன் மற்றும் திரு. ஜெயஸ்ரீ மணிகண்டன், திரு. லீன்ஸ்ராஜ் (திமுக), காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. இராதாகிருஷ்ணன் மற்றும் திரு. மகேஷ்லாசர், திரு. செல்வம் (தேசிய வாத காங்கிரஸ்)ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.